சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1294/2022 and O.S.1367/2022**

பி.வா.சா.1 சேனாதிபதி 14.02.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவண காலத்திலேயே தாவா சொத்துக்கள் எங்களுடைய குடும்பத்தாரின் சுவாதீன அனுபவத்தில் இருந்தது என்று நாங்கள் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எந்தவொரு காலத்திலும் நாங்களோ எங்களது முன்னோர்களின் சுவாதீன அனுபவத்தில் தாவா சொத்து இருந்தது என்று சொன்னால் தவறு. தாவா சொத்துக்களை வாதிகளும் அவர்களது முன்னோர்களும்தாம் நீண்ட நெடுங்காலமாக பாத்தியப்படுத்தி சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தில் வாதிகளின் குடும்பத்தாருக்கு தெரியாமல் வருவாய் துறை ஆவணங்களை எங்கள் குடும்பத்தார் பெயரில் மாற்றிக்கொண்டு தாவா சொத்தில் உரிமை கோருகிறோம் என்று சொன்னால் தவறு. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எங்களுக்கு பாத்தியப்பட்டதுபோன்று காட்டி எங்கள் குடும்பத்தில் ஏற்படுத்திக்கொண்ட பதிவு ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களை அனைத்தும் தாவா சொத்துகளில் வாதிகளுக்கு உள்ள உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் தவறு. வாதிகள் கொடுத்துள்ள 1294-2022 மற்றும் 1367-2022 ஆகிய இரண்டு வழக்குகளும் அவர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.02.18 10:12:02 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

.